# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியம் - 2012

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தீர்ப்பனவு உத்தரவாத நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டின் அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதியத்தின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 24,823,597 ஆன நேரொத்த மிகையுடன் ஒப்பிடும் போது ரூபா 42,095,856 ஆன மிகையில் விளைந்திருந்தமையால், ரூபா 17,272,259 ஆல் மிகையில் அதிகரிப்பைக் காட்டுகின்றது.

### 2.2 நிதியத்தின் நிலைமை

கொழுப்பு பங்கு பரிவர்த்தனையானது நிதியத்தினை வலுப்படுத்தும் நோக்கத்துடன் 2011 யூலை 13 ஆந்திகதிய 2008 ஆம் இலக்க திருத்திய நம்பிக்கை பொறுப்பு உறுதியின்படி 2012 சனவரி மாதத்தில் நிதியத்திற்கு ரூபா 100 மில்லியனை மாற்றியிருந்தது.

### 2.3 நிதியத்தின் செயற்பாடுகள்

மத்திய வைப்பிடல் முறைமையை தெளிவுபடுத்துகின்ற உறுப்பினர்களிற்கிடையிலான பிரச்சினைகள் 1998 மே 21/22 ஆந்திகதிய 1376 ஆம் இலக்க நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 5 (அ) பந்தியின்படி அறிக்கையிடப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் போது எவ்வித இழப்பீடுகளும் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.